# திமிங்கிலத்தைக் கூறுபடுத்தி, ஆய்வுப்பணி தொடங்கியது

ஜூரோங் தீவில் கரையொதுங்கிய 'ஸ்பெர்ம் வேல்' எனப்படும் திமிங்கிலத்தின் உடலை முழுமையாகக் கூறுபடுத்தி மேற்கொண்ட ஆய்வுக்காக எடுத்துச் செல்லப்படுவதற்கு பல வாரங்கள் ஆகலாம் என லீ கொங் சியாங் இயற்கை வரலாற்று அரும்பொருளக ஊழியர்கள் தெரிவித்தனர்.

அழுகிவரும் திமிங்கிலத்தின் உள்ளுறுப்புகள் வெடிக்கும் அபாயம் இருப்பதாக, தாழ்ந்த வெப்பநிலைத் திரட்டுகளின் காப்பாளர் திரு ஃபூ மாவோஷெங் கூறினார்.

திமிங்கிலத்தின் வயிற்றின் அடிப்பகுதியில் உலோகக் குழாய்கள் செருகப்பட்டு குடல்பகுதியில் இருந்த காற்று பாதுகாப்பாகவும் மெதுவாகவும் நேற்றுக் காலை வெளியேற்றப்பட்டதாக 'ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்' தெரிவித்தது.

திமிங்கிலத்தின் எலும்பு காட்சிப்படுத்தப்படுவதற்காகப் பாதுகாக்கப்படும்.

மேலும் அது உண்ட உணவு, அது எந்தப் பகுதியில் இருந்து வந்திருக்கலாம் என்பது குறித்து அறிந்துகொள்ளவும் 'டிஎன்ஏ' ஆய்வுகளுக்காகவும் அதன் திசுக்களும் சேகரிக்கப்படும்.

திமிங்கிலத்தின் உடல் எடையை வைத்து அது இளம் வயதினதாக இருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது. மேலும் அதன் உடல் இருக்கும் நிலையைக் கொண்டு அது இறந்து பல நாட்களாகி இருக்கலாம் எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.



திமிங்கிலத்தின் உடலைக் கூறுபடுத்தும் பணியை ஆய்வாளர்கள் நேற்று தொடங்கினர். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.